நகராட்சி அலுவலகம்,

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.

நாள் 24.02.2023

**சாதரணக்கூட்டம்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதரணக்கூட்டம் எதிர்வரும் **2023ம்** வருடம் **பிப்ரவரி** மாதம் 28**ம்** தேதி **செவ்வாய் கிழமை காலை** 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதாரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

## பொருள் எண்.1

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்க சொந்தமான தினசரி சந்தை கடைகள் காலியாக உள்ள கடைகளுக்கு 25/01/2023-ம் தேதியில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏல நடவடிக்கைகள் பின்வருமாறு

| வ.எண் | பெயர் முகவரி விபரம் | கடை எண் | ஏலகேள்வி | ஒப்பந்த கேள்வி |
|---|---|---|---|---|
| I 1 | A. மதியழகன்,த/பெT. ஆனந்தகிருஷ்ணன்<br>101/M சண்முகநகர்,தெற்கு அகஸ்தியர்புரம்<br>விக்கிரமசிங்கபுரம் | 3 | 2150 | - |
| 2 | திரு.A. செல்வம்,த/பெT. ஆனந்தகிருஷ்ணன்<br>101/M சண்முகநகர்,தெற்கு அகஸ்தியர்புரம்<br>விக்கிரமசிங்கபுரம் | 3 | 2140 | - |
| II 1 | திரு.T. இசக்கிராஜன்,த/பெT. E. திருமலை<br>117/8 பசுக்கிடைவிளை மெயின்ரோடு<br>விக்கிரமசிங்கபுரம் | 9 | 2170 | - |
| 2 | திரு.R. ஜெயக்குமார்,த/பெT. A. ராமசாமி.<br>59 A கிழைதோட்டத்தெரு<br>கீழப்பாவூர்,தென்காசி மாவட்டம் | 9 | 2200 | - |
| III 1 | திரு.A. இசைசெல்வன்,த/பெ.. அருணாசலம்<br>12/26 பிள்ளையார் கோவில் தெரு<br>கொட்டாரம்,விக்கிரமசிங்கபுரம் | 43 | 2250 | - |
| 2 | திரு.E. தர்மலிங்கம்,த/பெT.A. இசக்கிமுத்து<br>64/4 ராமலிங்கபுரம் நடுத்தெரு<br>விக்கிரமசிங்கபுரம் | 43 | 2230 | - |

மேற்படி வரிசை எண் I முதல் III வரை ஏலத்தில் கலந்து கொண்ட அனைவரும் வைப்புத்தொகை செலுத்தியுள்ளனர். ஒப்பந்தப்புள்ளி எவரும் ஒப்படைக்கவில்லை. ஆனால் அனைரும் ஏலக்கேள்வி கோரியுள்ளனர்.

(அ) வரிசை எண் I-ல் கடை எண் 3-க்கு வரிசை எண் -1ல் காணும் திரு.A. மதியழகன் என்பவர் கூடுதல் ஏலக்கேள்வியாக ரூ2150/- மாத வாடகை கோரியுள்ளார்.

(ஆ) வரிசை எண் II-ல் கடை எண் 9-க்கு வரிசை எண் -2ல் காணும் திரு. R. ஜெயக்குமார் என்பவர் கூடுதல் ஏலக்கேள்வியாக ரூ.2200/- மாத வாடகை கோரியுள்ளார்.

(இ) வரிசை எண் III கடை எண் 43-க்கு வரிசை எண் 1ல் காணும் திரு.A.இசைச்செல்வன் என்பவர் கூடுதல் ஏலக்கேள்வியாக ரூ.2250 மாத வாடகை கோரியுள்ளார்.

மேற்படி கூடுதல் ஏலக்கேள்வி கோரியுள்ள கடை எண் 3, 9 மற்றும் 43 ஆகிய கடைகளுக்கு அருகாமையில் உள்ள கடைகளில் ஏற்கனவே உள்ள வாடகையினை ஒப்பீடு செய்கையில் தற்போது வரப்பெற்ற ஏலக் கேள்வி கூடுதலாகவே உள்ளது. மேலும் மேற்படி கடைகள் பல வருடங்கள் காலியாக இருந்து வருகிறது.

எனவே கூடுதல் ஏலக்கேள்வி கோரியுள்ளதை ஏற்று நகராட்சி வருவாயை கருத்திற் கொண்டு கடைகள் 3,திரு.A. மதியழகன், கடைஎண் 9 திரு.A. ஜெயக்குமார்மற்றும் கடைஎண் 43, திரு.A. இசைச்செல்வன் ஆகிய நபர்களுக்கு குத்தகை அனுபவ உரிமை ஒப்பளிப்பு செய்ய மன்ற அனுமதிக்கு.

## அலுவலக குறிப்பு

கடை எண் 3, 9 மற்றும் 43-க்கு அதிக பட்ச ஏலகேள்வி கோரியுள்ள திரு.A. மதியழகன் திரு.R. ஜெயக்குமார், திரு.A. இசைச்செல்வன் ஆகியோர்க்கு நகராட்சி வருவாயை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 1.2.2023 முதல் அனுபவ உரிமை ஒப்படைப்பு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 226 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.2

இந்நகராட்சி வாகன நிலுத்தம் கட்டணம் பணிமேற்கொள்ள Ticket Machine வழங்குவதற்கு பார்வையில் காணும் விலைப்புள்ளி கீழ்காணும் விபரப்படி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி |
|---|---|---|
| 1 | எல்சடாய் நிஷி டெக்னாலஜி | இரண்டு மெஷின்கள் ரூ.25000/- |
| 2 | அருள் எலக்ட்ரானிக்ஸ் | இரண்டு மெஷின்கள் ரூ.29000/- |
| 3 | ஜஸ்டின் சிஸ்டம் ( ) சர்வீஸ் | இரண்டு மெஷின்கள் ரூ.33000/- |

மேற்படி வரப்பெற்ற மூன்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1-ல் காணும் எல்சடாய் நிஷி டெக்னாலஜி நிறுவனத்தின் விலைப்புள்ளி இரண்டு எண்ணம் மெஷின்களுக்கு ரூ.25000/- குறைந்த விலைப்புள்ளியாக உள்ளது. எனவே மேற்படி குறைந்த விலைப்புள்ளி ஒப்படைத்துள்ள எல்சடாய் நிஷி டெக்னாலஜி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கலாம்.

## அலுவலக குறிப்பு

1. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதித்து உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் ரூ.25000/- பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 227 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.3

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக பயன்பட்டில் உள்ள கணினிகள் மற்றும் பிரிண்டர்களில் ஏற்படும் பழுதுகளை அவ்வப்போது சரி செய்ய வேண்டி வருடாந்திர பராமரிப்பு மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட வருடாந்திர பராமரிப்பு இந்நகராட்சி தீர்மான எண்1174 நாள் 28.12.2020ன் படி, ஆக்னா மல்டி சுலுசன்,விக்கிரமசிங்கபுரம் நிறுவனத்திற்கு 30.11.2021 வரை வழங்கப்பட்டு, பின்னர் 01.12.2021 முதல் 30.112022 வரை ஓராண்டு காலம் நீடித்து அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது கணினிகளுக்கான வருடாந்திர பராமரிப்பு காலம் முடிவடைந்துள்ளதால், அலுவலக கணினிகள் மற்றும் பிரிண்டர்களின் ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆக்னா மல்டி சுலுசன் , விக்கிரமசிங்கபுரம் நிறுவனத்தின் மூலம் கணினிகள் வருடாந்திர பராமரிப்பு பணிக்காலத்தினை நீடித்து தர வேண்டியும், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதமான ரூ.88854/-க்கு செய்து தரவும் சம்மதம் தெரிவித்துள்ளார்,அதன் அடிப்படையில் இந்நகராட்சியில் உள்ள கணினிகள் பராமரிப்பு பணியினை ஆக்னா மல்டி சுலுசன்,விக்கிரமசிங்கபுரம் நிறுவனத்திற்கு மேலும் ஒரு வருடக்காலம் நீட்டித்து வழங்கவும், செலவினத் தொகை ரூ. 88854/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் அனுமதி வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

## அலுவலக குறிப்பு

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் உள்ள கணினிகள் மற்றும் பிரிண்டர்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் அலுவலக பணி பாதிக்கப்படாமல், ஆக்னா மல்டி சுலுசன் நிறுவனம் மூலம் சரி செய்து தரப்பட்டு வருகிறது. மேலும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ளவும் சம்மதம்

தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அலுவலக கணினிகளில் வருடாந்திர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆக்னா மல்டி சுலுசன் , விக்கிரமசிங்கபுரம் நிறுவனத்திற்கு 01.12.2022 முதல் 30.11.2023 வரை ஓராண்டு காலம் நீடித்து உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 228 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.4

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி தணிக்கை ஆண்டு 2020-2021 ஆண்டிற்கு தணிக்கை செய்தமைக்கு தணிக்கை கட்டணமாக அரசு கணக்கில் செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ.63866/-ம் நிலுவையாக உள்ளது என 2020-2021ம் ஆண்டு தணிக்கை பத்தி எண் 56-ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன் அடிப்படையில் 2020-2021ம் ஆண்டுக்கான தணிக்கை கட்டணம் ரூ. 63866/-ம் (அறுபத்து மூன்றாயிரத்து எண்ணுற்று அறுபத்து ஆறு மட்டும்) குடிநீர் திட்ட கணக்கிலிருந்து அரசு கணக்கு தலைப்பில் செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

ந.க.எண் 1960/2018/சி1

### அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 229 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.5

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி கிராமம் 1 நத்தம் புல எண் 270/1 விஸ்தீரணம் 20.54.50 ஹெக்டேர் நத்தம் சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ள திருமதி. செல்வகணபதி என்பவருக்கு வரன்முறை செய்து பட்டா வழங்க ஆட்சேபணை ஏதும் இல்லை என வருவாய் வட்ட்சியர் அம்பாசமுத்திரம் கடிதம் ந.க.எண்.ஆ2/592/2022 நாள் 18.01.2023-ன்படி மன்ற தீர்மானம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நத்தம் புல எண் 270/1ல் வரன்முறை செய்து பட்டா வழங்க ஆட்சேபணை ஏதுமில்லை என்பதற்கு மன்றம் அனுமதிக்கு

ந.க.எண் 1960/2018/சி1

### அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 230 / அம்பாசமுத்திரம் வட்டாச்சியர் அவர்களின் கடிதத்தில் சர்வே புல எண் 270/1 என தவறுதலாக உள்ளது. சரியான சர்வே புல எண் தெரிவித்து கடிதம் கோரலாம்.**

## பொருள் எண்.6

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி எல்லைப்பகுதியிலுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் /உற்பத்தி வட்டம்/திருநெல்வேலி, பாபநாசம் மற்றும் சேர்வலார் பகுதியிலுள்ள மின்வாரிய குடியிருப்பு மற்றும் அலுவலக கட்டிடங்களுக்கு 2010-2011 முதல் நடப்பு ஆண்டு வரை சொத்துவரி செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது. இப்பொருள் தொடர்பாக சம்மந்தப்பட்ட மின்வாரிய துறைக்கு பல கடிதங்கள் அனுப்பப்பட்டும் நேரடியாக சென்று சொத்துவரி செலுத்த கோரப்பட்ட போதும் மின்வாரிய சம்மந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து மின்வாரிய கட்டிடங்கள் சில பயன்படுத்த முடியாதவாறு சிதலமடைந்தும் கட்டிடங்கள் இடிந்து விட்ட படியாலும் இந்த கட்டிடங்களுக்கான வரிவிதிப்புகளை நீக்கம் செய்ய கடிதம் வரப்பட்டுள்ளது. அதன்பேரில் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்2906/2016/ஆ1, நாள்: 20.01.2023-ன்படி மேற்படி கட்டிடங்களை நேராய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க இந்நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வரின் தலைமையில் இரு குழுக்கள் நியமிக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டதில் கீழ்கண்ட பட்டியலில் காணும் வரிவிதிப்பு கட்டிடங்கள் பழுதடைந்துள்ளதாலும், கட்டிடங்கள் இடிந்து இல்லாத நிலையில் உள்ளதாகவும் அறிக்கை சமர்பித்துள்ளனர்.

| வ. எண் | பழைய வரி விதிப்பு எண் | புதிய வரிவிதிப்பு எண் | பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள கட்டிடங்களின் விபரம் | சொத்துவரி பட்டியலில் இருந்து நீக்க கோருவதற்கான காரணங்கள் | நீக்கம் செய்யப்பட வேண்டிய தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2022-23ம் முதல் அரையாண்டு | 2022-23ம் இரண்டாம் அரையாண்டு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 147/8119 | 147/009/00020 | எப்சீட் குவார்ட்டர்ஸ் I பிளாக் 3 (46-48) | கட்டிடம் இல்லை | 83 | 83 |
| 2 | 147/8135 | 147/009/00036 | பழைய மருந்தகம் ஏஇஎச்எம்எஸ் ஆபிஸ் (271-272) | கட்டிடம் இல்லை | 167 | 167 |
| 3 | 147/8145 | 147/009/00046 | டைப் குவார்ட்டர்ஸ் காரையார் மேலணை (364-371) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 4992 | 4992 |
| 4 | 147/8146 | 147/009/00047 | டைப் 3 குர்ட்டர்ஸ் காரையார் மேலணை (372-379) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 4992 | 4992 |
| 5 | 147.8149 | 147.009.00050 | கலையரங்கம் (382) | மின்பணியாளர்களின் மனமகிழ் மன்றமாக செயல்படுவதாலும், இலாப நோக்குடன் வருமானம் எதுவும் ஈட்டப்படவில்லை | 24479 | 24479 |
| 6 | 147/8150 | 147/009/00051 | செஷன் ஆபீஸ் பில்டிங்(383) | கட்டிடம் இல்லை | 3453 | 3453 |
| II. சேர்வலார் | | | | | | |
| **வ. எண்** | **பழைய வரி விதிப்பு எண்** | **புதிய வரிவிதிப்பு எண்** | **பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள கட்டிடங்களின் விபரம்** | **சொத்துவரி பட்டியலில் இருந்து நீக்க கோருவதற்கான காரணங்கள்** | | |
| 1 | 147/8152 | 147/009/00053 | டீசல் பம்ப் ஹவுஸ் (385) | கட்டிடம் இல்லை | 380 | 380 |
| 2 | 147/8153 | 147/009/00054 | குடிநீர் பம்ப் ஆபீஸ் சேர்வாலார் பவர்பெட் | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 273 | 273 |
| 3 | 147/8154 | 147/009/00055 | ஸ்கூல் பில்டிங்ஸ் (243-250) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 405 | 405 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 147/8156 | 147/009/00057 | 2 இ டெம்ப் பிளாக் நம்பர் I (269-270) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 132 | 132 |
| 5 | 147/8157 | 147/009/00058 | 3 இ டெம்ப் பிளாக் நம்பர் 2 (271-272) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 792 | 792 |
| 6 | 147/8158 | 147/009/00059 | ப்டைப் டெம்ப் பிளாக் நம்பர் 3 (273-278) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 83 | 83 |
| 7 | 147/8162 | 147/009/00063 | ஜி டெம்பரரி பிளாக் 2 (283-285) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 1082 | 1082 |
| 8 | 147/8163 | 147/009/00064 | மாடிபைடு குவார்ட்டர்ஸ் பிளாக் 20 (115) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 780 | 780 |
| 9 | 147/8185 | 147/009/00086 | 2 ஜி பெர்மனன்ட் குவார்ட்டர்ஸ் பிளாக் 22 (163,164) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 594 | 594 |
| 10 | 147/8193 | 147/009/00094 | 2 ஜி பெர்மனன்ட் குவார்ட்டர்ஸ் பிளாக் (178,179) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 900 | 900 |
| 11 | 147/8210 | 147/009/00111 | 2 எப் பெர்மனன்ட் குவார்ட்டர்ஸ் பிளாக் 16 (218,219) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 950 | 950 |
| 12 | 147/8212 | 147/009/00113 | 2 எப் பெர்மனன்ட் குவார்ட்டர்ஸ் பிளாக் 18 (222,223) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 950 | 950 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 | 147/8213 | 147/009/00114 | 2 எப் பெர்மனன்ட் குவார்ட்டர்ஸ் பிளாக் 19 (224,225) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 950 | 950 |
| 14 | 147/8214 | 147/009/00115 | சமுதாயக் கூடம் (301) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 2420 | 2420 |
| 15 | 147/8215 | 147/009/00116 | மோட்டார் ரூம் (303) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 1152 | 1152 |
| 16 | 147/8219 | 147/009/000120 | கேன்டீன் (313) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 1499 | 1499 |
| 17 | 147/8221 | 147/009/00122 | பவர் ஹவுஸ் (316) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 1331 | 1331 |
| 18 | 147/8225 | 147/009/00126 | பவர் ஹவுஸ் (320) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 2444 | 2444 |
| 19 | 147/8228 | 147/009/00129 | மருத்துவமனை கட்டடம் (323) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 1158 | 1158 |
| 20 | 147/8229 | 147/009/00130 | தொலைபேசி நிலையம் (324) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 171 | 171 |
| 21 | 147/8230 | 147/009/00131 | காவல் நிலையம் (325) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 623 | 623 |
| 22 | 147/8231 | 147/009/00132 | தபால் நிலையம் (326) | முற்றிலும் சேதமடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.. | 921 | 921 |

| | | | | மொத்தம் | 58156 | 58156 |
|---|---|---|---|---|---|---|

மேற்படி பட்டியல் எண் I-ல் காணும் 2,3,4,மற்றும் 6 -ல் காணும் வரிவிதிப்புகளில் உள்ள கட்டிங்கள் பயன்படுத்த முடியாத நிலையிலும் கட்டிடங்களும் இல்லாத நிலையில் உள்ளதால் அவற்றை 2022-23 ஆண்டு முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டு முதல் கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம். வரிசை எண் 5-ல் காணும் கலையரங்கள் மின்பணியாளர்களின் மனமகிழ் மன்றமாக செயல்படுவதாலும் மேற்படி கட்டிடம் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்குள் வருவாதாலும்,, எவ்வித வணிக பயன்பாடு தொடர்பான நிகழ்ச்சிகள் ஏதும் நடைபெறவில்லை என மின்வாரியம் மூலம் தெரிவிக்கப்பட்ட கட்டிடமாக உள்ளது. மேற்படி கட்டிடம் உள்ள காலிமனையானது வனத்துறைச்சார்ந்த பாதுகாக்கப்பட்ட பகுதியாகவும் உள்ளது.

எனவே மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள இனங்கள் அனைத்தும் குடியிருப்பு பயன்பாட்டில் இல்லாமல், மக்கள் வசிக்க முடியாத கட்டிடங்களாக உள்ளதாலும், 2022-23 ம் முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டு கேட்புத் தொகை ரூ.116312 /- யும் கேட்பில் இருந்து நீக்கம் செய்யலாம்.

## அலுவகக்குறிப்பு

மின் வாரியத்திற்கு சொந்தமான மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள வரிவிதிப்புகள் அனைத்தும் குடியிருப்பு பயன்பாட்டில் இல்லை என்பதாலும், மக்கள் வசிக்க முடியாத கட்டிட்ங்களாக உள்ளதாலும், . 2022-23 ம் முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டு கேட்புத் தொகை ரூ.116312 /- யும் கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 231 / மக்கள் வசிக்க இயலாத நிலையில் உள்ளதாலும், பயன்படுத்த முடியாத அளவில் கட்டிடங்கள் இடிந்த நிலையில் உள்ளதாலும், அலுவலக்குறிப்பில் உள்ள தொகையினை நீக்கம் செய்யலாம்.**

## பொருள் எண்.7

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பாபநாசம் மெயின் ரோடு பகுதியில் உள்ள, மூன்று விளக்கு மற்றும் அமலி மகளிர் மேல்நிலைப்பள்ளி எதிரே உள்ள பயனிகள் நிழற்குடையின் உள்ள இருக்கைகள் பழுதடைந்துள்ளதால், பொது மக்கள் இருக்கையில் அமர இயலாமல் , நின்றப்படியே பேரூந்து வரும் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட இரண்டு பயனிகள் நிழற்கைடையில் பழுதடைந்துள்ள இருக்கைகளை மாற்றி . புதிய இருக்கைகள் அமைக்கவும்,அதற்காக செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

## அலுவகக்குறிப்பு

பொதுமக்களின் நலன் கருதி, மூன்று விளக்கு மற்றும் அமலி மகளிர் மேல்நிலைப்பள்ளி எதிரே உள்ள பயனிகள் நிழற்குடையில் பழுதடைந்துள்ள இருக்கைகளை மாற்றம் செய்யும் பணி மேற்காள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 232 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.8

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர் பகுதியில் சேகரம் செய்யப்படும் குப்பைகளில் இருந்து பிரித்து எடுக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை, இந்நகராட்சி பகுதி கட்டபொம்மன் காலணியில் உள்ள RRC மையத்திற்கு கொண்டு சென்று, அங்கு அமைக்கப்பட்டுள்ள Bailing Machine மூலம் கட்டப்பட்டு , சிமெண்ட் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது., தற்போது Bailing Machine பழுது ஏற்பட்டுள்ளதால், இப்பணி பாதிப்படைந்துள்ளது. எனவே பழுதடைந்துள்ள Bailing Machine பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளவும், அதற்காக செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

## அலுவகக்குறிப்பு

திடக்கழிவு மேலாண்மை பணி அவசியம் மற்றும் அவசரம் கருதி, . பழுதடைந்துள்ள Bailing Machine பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்,

**தீர்மான எண் : 233 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.9

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில், முதலியார் பட்டி பகுதியில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நுண்னுயிர் குடில் அமைக்கப்பட்டு, குப்பைகள் உரமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட நுண்னுயிர் குடிலில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் குழாய்கள் பழுது ஏற்பட்டு, உரம் தயாரிக்கும் பணி பாதிப்படைந்துள்ளது. எனவே மேற்கண்ட முதலியார் பட்டி நுண்னுயிர் குடிலில், பழுதடைந்துள்ள தண்ணீர் குழாய்களில் உள்ள பழுதுகளை, உடன் சரி செய்யவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

### அலுவகக்குறிப்பு

திடக்கழிவு மேலாண்மை பணி அவசியம் மற்றும் அவசரம் கருதி, . பழுதடைந்துள்ள முதலியார் பட்டி நுண்னுயிர் குடில் தண்ணீர் குழாய்களின் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 234 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.10

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 11, வது, வார்டு பகுதியில் மருதம் நகர் முதல் சிவஞானபுரம் தெற்கு தெருக்கு செல்லும் சாலையில் உள்ள பாலம் சிதிலடைந்து, பொது மக்கள் மற்றும் குழந்தைகள் செல்ல இயலாதி நிலை ஏற்பட்டுள்ளது. பொது மக்களின் நலன் கருதி, மேற்கண்ட சிதிலமடைந்த பாலத்தினை அகற்றி புதிய பாலம் அமைக்க வேண்டி, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால், தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.16.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு, மேலும் பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

### அலுவகக்குறிப்பு

சிதிலமடைந்த பாலத்தினை பொது மக்கள் நலன் கருதி சரி செய்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 16.00 இலட்சத்திற்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.,

**தீர்மான எண் : 235 / நகராட்சியின் நிதிநிலமையினை கருத்திற் கொண்டு, பொது நிதி அல்லது திட்ட நிதியின் கீழ் முன்னுரிமையின் படி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.11

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் கடந்த 2012 ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வேண்டி, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் கொள் முதல் செய்யப்பட்ட டம்பர் பிளசேர் வாகனம், பயன்பாட்டில் இல்லாமல், நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனை கழிவு நீர் வாகனமாக மாற்றம் செய்ய வேண்டி நகர்மன்றத்தால், தீர்மான எண் 129 நாள் 30.08.22 ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மை பணிகளில் அவசியம் கருதி, மேற்கண்ட வாகனத்தை கழிவு நீர் வாகனமாக மாற்றம் செய்வதற்கு பதிலாக, டிப்பர் லாரியாக மாற்றம் செய்யப்பட்டால், நாள்தோறும் நகர்பகுதிகளில் உள்ள குப்பைகளை சேகரம் செய்ய உபயோகமாக இருக்கும் என கருதி, டம்பர் பிளசேர் வாகனத்தை, டிப்பர்லாரியாக மாற்றம் செய்ய இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதி,ப்பீட்டுத் தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றத்தின்அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

## அலுவகக்குறிப்பு

திடக்கழிவு மேலாண்மை பணி என்பதாலும், பயன்படுத்தப்படாமல் நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்பதாலும், டிப்பர் லாரியாக மாற்றம் செய்யப்பட்டால், நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்கும் உபயோகமாக இருக்கும் என்பதாலும், இப்பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்,

**தீர்மான எண் : 236 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.12

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் பல்வேறு திடக்கழிவு, தனி நபர் கழிப்பறை, சமுதாய கழிப்றை போன்றவைகள் ஏற்படுத்தப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. தற்போது SBM Team ODF+க்கு கள ஆய்வு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் நமது பகுதிகளில் அமைந்துள்ள பெண்கள் பயன்படுத்தும் சமுதாய கழிப்பறையில் சானிட்டரி நாப்கின் எரிக்கும் இயந்திரம், சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரம் வாங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் வலியுறுத்தி உள்ளார்கள். எனவே நமது பகுதியிலுள்ள 10CTC சமுதாய கழிப்பறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 10CTC சமுதாய கழிப்பறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே மேற்படி சமுதாய கழிப்பறையில் மேற்படி சானிட்டரி நாப்கின் எரிக்கும் இயந்திரம் மற்றும் சானிட்டர் நாப்கின் வழங்கும் இயந்திரம் வாங்க சுகாதார ஆய்வாளர் அறிக்கை செய்துள்ளார்.

மேற்கண்ட இயந்திரங்கள் விநியோகம் செய்வதற்கு வரப்பெற்ற விலைப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் ஆணையாளர் அவர்களின் பார்வைக்கும் மன்றத்தின் அனுமதிக்கும்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகைரூ. |
|---|---|---|
| 1 | பர்ஸித் டிரேடர்ஸ், நேப்கின் எரிக்கும் இயந்திரம் 10 எண்ணம் ஒரு முறைக்கு | 15184/- (with warranty)<br>12884/- (without warranty) |
| 2 | நேப்கின் விற்பணை செய்யும் இயந்திரம் Vending machine | 5600/- (with warranty) |
| II | **கமலா டிரேடர்ஸ், திருச்சி**<br>1. நேப்கின் எரிக்கும் இயந்திரம் 10 எண்ணம் ஒரு முறைக்கு<br>2. நேப்கின் விற்ப்பணை செய்யும் இயந்திரம் Vending machine | 16182/-(with warranty)<br>14680/-(without Warranty)<br>6899/- (with warranty) |
| III | **ஆர் எஸ் ஏ டிரேடர்ஸ்**<br>3. நேப்கின் எரிக்கும் இயந்திரம் 10 எண்ணம் ஒரு முறைக்கு<br>1. நேப்கின் விற்ப்பணை செய்யும் இயந்திரம் Vending machine | 16582/- (with warranty)<br>15580/- (without warranty)<br>6998/- (with warranty) |

## அலுவகக்குறிப்பு

மேற்கண்ட விலைப்புள்ளியில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **பர்ஸித் டிரேடர்ஸ்** நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க வும், அதற்கான செலவினத் தொகையினை இந்நகரட்சி பொது நிதியில் இருந்து செலவினம் செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்,

**தீர்மான எண் : 237 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.13

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரப்பெற்ற வாகனங்களுக்கும்,ஆட்டோக்களுக்கும் தகுதிசான்று பெறுவதற்கும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் பொதுநிதியில் இருந்து செலவுகள் செய்வதற்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண்:81 ,நாள்: 29.06.2022 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில்உள்ள வாகனம் TN76AX

1618 க்கு பழுதுபார்ப்பு பணிகள் செய்வதற்கும் அவசரஅவசியம் கருதி குறுகியகால விலைப்புள்ளி கோரப்பட்டதில் ல் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ,எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ விநாயகர் மோட்டார் ஒர்க்ஸ் | ரூ,8640.00 |
| 2 | சுந்தரம் மோட்டர்ஸ் | ரூ,9220.00 |
| 3 | ஜெனரல் மோட்டர்ஸ் | ரூ9295,00 |

## அலுவலககுறிப்பு:

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1 ல் உள்ள ஸ்ரீ விநாயகர் மோட்டார் ஒர்க்ஸ்,அம்பாசமுத்திரம் என்பவரின்விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசரம் அவசியம் கருதி பொதுசுகாதாரம் பணிகள் பாதிக்கப்படாமலும், பொதுமக்களின் நலன் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் இந்நகர்மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 238 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.14

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதிகளில் உள்ள 21 வார்டுகளில் மொத்தத வீடுகள் 19370 உள்ளன. நகரில் உருவாகும் திடக்கழிவுகளை மூன்று MCC மற்றும் 1 RCC யில் வைத்து குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பை மற்றும் மட்காத குப்பை என தரம் பிரித்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி நகராட்சியில் சேகரமாகும் குப்பையின் அளவு மற்றும் வார்டு கள் பற்றிய விபரம் MCC யில் தகவல் பலகை தயார் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. அதன்படி ராமலிங்கபுரம் ,முதலியார்பட்டி மற்றும் அய்யனார்குளம் MCC யில் தகவல் பலகை வர்ணம் பூச விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ,எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ தரன் ஆர்ட்ஸ்,அம்பாசமுத்திரம் | ரூ.2800.00 |
| 2 | விஜய் ஆர்ட்ஸ், அம்பாசமுத்திர்ம் | ரூ.3000.00 |

## அலுவலககுறிப்பு:

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1 ல் உள்ள ஸ்ரீதரன் ஆர்ட்ஸ்,அம்பாசமுத்திரம் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி பொதுசுகாதாரம் பணிகள் பாதிக்கப்படாமலும், பொதுமக்களின் நலன் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் இந்நகர்மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத் தொகை ரூ. 2800 x 3 = 8400/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 239 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.15

திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண் 2989/22/அ1 நாள் 21.09.2022 செயல் முறை ஆணையில் திருநெல்வேலி மாவட்டம் அரசுப்பொருட்காட்சி திடலில் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி சார்பில் மாதிரி நுண்னுயிர் குடில் அமைத்து கண்காட்சியில் வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி, மேற்கண்ட மாதிரி தயார் செய்ய வேண்டி, வரப்பெற்ற உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| I | நிறுவனத்தின் பெயர் | தொகைரூ. |
|---|---|---|
| 1 | RKM ப்ளக்ஸ் பிரிண்டர்ஸ் மெயின் பஜார் விக்கிரமசிங்கபுரம் | ரூ.8400/- |

| | | |
|---|---|---|
| 2 | விஜய் ஆர்ட்ஸ் பூக்கடை பஜார், அம்பாசமுத்திரம் | ரூ.7200/- |

## அலுவலககுறிப்பு:

குறைவான விலைப்புள்ளிக் கொடுத்துள்ள விஜய் ஆர்ட்ஸ் அம்பாசமுத்திரம் அவர்களின் விலைப்புள்ளியை அனுமதித்து, பணி மேற்கொண்டதற்கு தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 240 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.16

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி கிராமம் 1 நத்தம் புல எண் 364/1 விஸ்தீரணம் 5.77.0 ஹெக்டேர் நத்தம் சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ள திரு. சட்டநாராயணன் என்பவருக்கு வரன்முறை செய்து பட்டா வழங்க ஆட்சேபணை ஏதும் இல்லை என வருவாய் வட்டாட்சியர், அம்பாசமுத்திரம் கடிதம் ந.க.எண்: ஆ2/5234/2022, நாள் 02.02.2023 ன்படி மன்ற தீர்மானம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நத்தம் புல எண் 364/1ல் வரன்முறை செய்து பட்டா வழங்க ஆட்சேபணை ஏதுமில்லை என்பதற்கு மன்றம் அனுமதிக்கு.

ந.க.எண் 0130/2023/எப்1

## அலுவலககுறிப்பு:

வருவாய் வட்டாட்சியர், அம்பாசமுத்திரம் அவர்களின் கடிதப்படி, பரிசீலனை செய்து அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 241 / மன்றத்தில் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்பதால், மன்றத்தால் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.17

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள சொரிமுத்து அய்யனார் கோவில் ஆடிஅமாவாசை அன்று ஒவ்வொரு ஆண்டும் மிகச்றிப்பாக நமடபெற்று வருகின்றது. இவ்வாண்டு 2022 ல் ஜீலை 28 ம் தேதி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையின் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சி சார்பில் 25,26,27 மற்றும் 28 ஆகிய நாட்களுக்கு குடிநீர் சப்ளை செய்ய சேர் ,டேபிள் மற்றும் பந்தல் அமைக்க விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ,எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பந்தல்ஸ், விக்கிரமசிங்கபுரம் | ரூ.14400.00 |
| 2 | மணி பந்தல்ஸ்,விக்கிரமசிங்கபுரம் | ரூ.16400.00 |

## அலுவலககுறிப்பு:

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1 ல் உள்ள ஸ்ரீ பந்தல்ஸ், விக்கிரமசிங்கபுரம்,அம்பாசமுத்திரம் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசரம் அவசியம் கருதி பொதுசுகாதாரம் பணிகள் பாதிக்கப்படாமலும், பொதுமக்களின் நலன் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் இந்நகர்மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 242/ மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.18

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள 21 வாடுகளிலும், திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, வீடுகள் தோறும் குப்பைகள் சேகரிக்க வேண்டி, தள்ளுவண்டிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட தள்ளுவண்டிகளில் உள்ள டயர்கள் பழுதடைந்துள்ளதால், வீடு வீடாக சென்று குப்பைகள் சேகரம் செய்ய சிரமம் ஏற்படுவதுடன்., பணிகள் பாதிக்கப்படுகின்றன. எனவே மேற்படி தள்ளுவண்டிகளில் உள்ள பழுதடைந்த டயர்களை மாற்றம் செய்யவும் , அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

## அலுவலகக்குறிப்பு

திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசியம் மற்றும் அவசரம் கருதி, உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.,

**தீர்மான எண் : 243/ மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.19

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலகத்தில் கீழ்க்கண்ட விவரப்படியான அத்தியாவசிய செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

1. துய பெருநை நெல்லைக்கு பெருமை சைக்கிள் பேரணி நடைபெற்றது, மற்றும் இதர நிகழ்ச்சிகள் நடைபெற்ற வகைக்கு பாபநாசம் கோவில் முன்பு சாமியான பந்தல் அமைத்த வகைக்கு ரூ. 4500/-
2. திடக்கழிவு மேலாண்மை பணி க்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN 76Ax 1614 ஆட்டோ வாகனத்தில் செல்ப் மோட்டார் பழுது நீக்கம் செய்த வகைக்கு ரூ. 4645/-
3. விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான பெஞ்ச் இரண்டு எண்ணம் அம்பாசமுத்திரம் சர்வோதய சங்கம் மூலம் கொள்முதல் செய்த வகைக்கு ரூ. 9912/-

## அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட பணி மேற்கொண்டதற்கும், செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 244/ மன்றம் அனுமதிக்கப்பட்டது**

ஓம்/- திரு.செல்வசுரேஷ்பெருமாள்
நர்மன்றத்தலைவர்
விக்கிரமசிங்கபுரம் நகராட்சி

This document was created with the Win2PDF "Print to PDF" printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/